**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2014**

**A051 மொழிவரலாறு – 1**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மொழியை எவ்வாறு இரு வகைப்படுத்தலாம்?
2. ஓவிய எழுத்து முறையில் அமைந்த மொழிகள் இரண்டனைக் குறிப்பிடுக.
3. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வின் தந்தை என்று கூறப்படுபவர் யார்?
4. கெமைடு என்பவர் கண்டுபிடித்த குகைக்கல்வெட்டு எந்த இடத்தில் உள்ளது?
5. தொல்காப்பியர் காலத்தில் மெய்யெழுத்துகள் எவ்வாறு எழுதப்பட்டன?
6. தொல்காப்பியர் காலத்தில வழங்கிய அஃறிணைப் பன்மை விகுதி எது?
7. தமிழில் பெயரடை பெயருக்கு முன்னர் வருமா? பின்னர் வருமா?
8. 'மூவேந்தரும் வந்தனர்' என்ற தொடரில் வரும் உம்மைக்கு வழங்கப்படும் பெயர் யாது?

9. சங்கம் மருவிய காலத் தமிழ்மொழி வரலாற்றை அறிய உதவும் இலக்கியங்கள் யாவை?
10. பன்னிரு ஆழ்வார்களில் பெண்பாற் புலவர் யார்?
11. சோழர் காலத் தமிழில் அகரம் இகரமாக மாறுவதற்கு ஒரு சான்று தருக.
12. நாயக்கர் காலத்தில் பேச்சுத் தமிழுக்கு இலக்கணம் எழுதியவர் யார்?
13. 'ஒற்றை நெருப்பு' உதட்டின் வாசிப்பில், புல்லாங்குழலே உருகுகிறது' - இப்புதுக்கவிதை எதைக் குறிக்கிறது?
14. முஸ்லீம்களின் வேத நூல் எது?
15. நாட்குறிப்பு எழுதும் பழக்கம் கொண்ட புதுச்சேரிப் பிரெஞ்சு அரசு அதிகாரி யார்?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. மரபுச் சொற்கள் என்றால் என்ன என்பதைச் சான்று தந்து விளக்குக.
2. சார்பெழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. தென் பிராமிக்கும் வட பிராமிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
4. மெல்லினத்தை மொழிநூலார் மூக்கொலிகள் என்று ஏன் குறிப்பிடுகின்றனர்? விளக்குக.
5. திருநாவுக்கரசர் தேவாரத்தில் இடம்பெறும் துணை வினைகள் பற்றி எழுதுக.
6. சோழர் காலத் தமிழில் இரட்டித்து வரும் தகரம், இரட்டித்து வரும் சகரமாதலைச் சான்றுடன் விளக்குக.
7. கல்கியின் கவர்ச்சி நடை பற்றி எழுதுக.
8. தற்காலத் தமிழ் உரை நடையில் இலக்கணத் தூய்மை எந்த அளவு காணப்படுகின்றது? விளக்குக.

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) தமிழ்மொழி வரலாற்றை அறிய உதவும் இலக்கண, இலக்கியச் சான்றுகள் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) தென்திராவிட மொழிகள் பற்றிக் கூறப்படும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

2. (அ) தொல்காப்பியர் காலத் தமிழில் வழங்கிய பதிலிடுபெயர்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) சங்க காலத் தமிழில் பெயர்ச்சொல்லைப் பொறுத்தவரை நிகழ்ந்த மாற்றங்களைக் கூறி விளக்குக.

3. (அ) சோழர் காலத் தமிழில் நிகழ்ந்த வினையியல் மாற்றங்களைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இருபதாம் நூற்றாண்டுப் பேச்சு தமிழில் ஏற்பட்டுள்ள ஒலிமாற்றங்களைச் சான்று காட்டி விளக்குக.